**கவனிக்க.-** *24.09.2010 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (IIஅ) மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*
**கவனிக்க.-** *இவ்வர்த்தமானியின் பகுதி IV (அ) மற்றும் பகுதி IV (ஆ) ஆகியன சிங்கள மற்றும் ஆங்கில மொழியில் தனியாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளன.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1674 - 2010 ඔක්තෝබර් මස 01 වැනි සිකුරාදා - 2010.10.01**
*1674 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 01 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1416 | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவு திரட்டுகள் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 1420 | ஆதன விற்பனைகள் | - |
| துணைவிதிகள் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| | | நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தில், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2010, ஒற்றோபர் மாதம் 08 ஆந் திகதி வியாழக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2010, செத்தெம்பர் மாதம் 24 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2010 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# பதவிகள் - வெற்றிடம்

## அலவ்வ பிரதேச சபை

அலவ்வ பிரதேச சபையில் வெற்றிடமாக உள்ள கீழ்வரும் அட்டவணையில் குறிக்கப்பட்டிருக்கும் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்காக பின்வரும் தகைமைகளைக் கொண்ட அலவ்வ பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் நிரந்தர வதிவுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தற்போது அலவ்வ பிரதேச சபையில் தற்காலிக, பதிலீடு, ஒப்பந்தமுறை, சலுகை அடிப்படையில் சேவை செய்வோருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

| பதவி | வெற்றிடம் | சம்பள அளவுத்திட்டம் | கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் |
|---|---|---|---|
| (1) ஆயுர்வேத தொழிலாளர் | 01 | PL -1-ரூபா 11,730 – 10×130 – 10×145 – 12×160 – ரூபா 17,600 | கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) பரீட்சையில் ஆகக்குறைந்தது இரண்டு (2) பாடங்களிலேனும் சித்தியடைந்திருக்க வேண்டும். (விருப்பத்துக்குரிய பாடங்கள் தவிர்ந்த) |
| (2) வியாபார நிலைய கண்காணிப்பாளர் | 01 | PL -1-ரூபா 11,730 – 10×120 – 10×130-10×145 – 12×160 – ரூபா 17,600 | கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) பரீட்சையில் ஆகக்குறைந்தது இரண்டு (2) பாடங்களிலேனும் சித்தியடைந்திருக்க வேண்டும். (விருப்பத்துக்குரிய பாடங்கள் தவிர்ந்த) |

2. **தேவையான மற்றைய தகைமைகள்**:

(1) அரச சபையில் அல்லது அரச கூட்டுத்தாபன சேவையிலிருந்து ஒழுங்கற்றதின் மீது கட்டாய ஓய்வில் அனுப்பப்பட்ட, தண்டனையாக ஓய்வில் அனுப்பப்பட்ட, அரச சேவையில் சேர்க்கப்படாமல் மனிதாபிமான மாற்றுவழி மூலம் ஓய்வு கொடுக்கப்பட்ட, ஒழுக்காற்று நடவடிக்கை மூலம் பதவி குறிக்கப்பட்டவர்கள் விண்ணப்பிக்க தகுதியற்றவர்கள். சேவையிலிருந்து பதவி விட்டு விலகியவர்களுக்கு இது பொருந்தாது;

(2) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கு செய்த குற்றத்திற்கு நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்படாத ஒருவராக இருத்தல் வேண்டும் ;

(3) விண்ணப்பதாரர் இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(4) சிறந்த நடத்தையும் நல்ல தேகாரோக்கியம் உடையவராகவும் இருத்தல் வேண்டும் ;

(5) விண்ணப்பப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்கு 18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். தற்போது அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் நிரந்தர சேவையில் இருப்பவர்களுக்கு இந்த வயதெல்லை கணக்கிடப்படமாட்டாது ;

(6) விண்ணப்பப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்கு அண்மித்த மூன்று (3) ஆண்டுகளுக்குக் குறையாத காலம் அலவ்வ பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் நிரந்தர வதிவிடத்தை உடையவராயிருத்தல் வேண்டும். (இதற்காக நிரந்தர வதிவிடம் தொடர்பாக கிராம உத்தியோகத்தரினால் வழங்கப்பட்ட உறுதிப் பத்திரத்தினை பிரதேச செயலாளரினால் கையொப்பமிடப்பட்டு உறுதிப்படுத்தப்பட்ட உறுதிப் பத்திரமாகச் சமர்ப்பித்தல் வேண்டும்)

(7) ஆயுர்வேத தொழிலாளி பதவிக்கு ஆயுர்வேத நிறுவனமொன்றில் செயலனுபவம் இருத்தல் வேண்டும். வியாபார நிலைய கண்காணிப்பாளர் பதவிக்கு வியாபார நிலைய கண்காணிப்பாளராக செயலனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

(8) தற்போது சேவையிலுள்ள அமைய/சமயாசமய/ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ள ஊழியர்களுக்கு மாத்திரம் செல்லுபடியாகும் வகையில் அக்கால கட்டத்தில் சேவையில் சேர்த்துக்கொள்ளப்படும்போது அமுலில் இருந்து நடைமுறையின் கல்வித் தகைமைகள் ஏற்றுக்கொள்ளபப்டும்.

(9) தற்போது அரச/ அல்லது உள்ளூராட்சி சேவையிலிருக்கும் விண்ணப்பதாரிகள் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிக்கு அண்மித்த ஐந்து (05) வருடங்களுக்குள் ஏதும் ஒரு குற்றத்துக்கு எச்சரிக்கையைத் தவிர்ந்த தண்டனை பெறாதவராகவும், இக்காலத்துக்குள் உழைக்கக்கூடிய சம்பள அதிகரிப்புக்களை உரிய காலத்துக்குள் பெற்றுக்கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.

**ஆட்சேர்ப்பு முறை**.-விண்ணப்பதாரிகளை நேர்முகப்பரீட்சைக்கு அழைத்து உரிய தகுதிகள் உள்ளவர்களை பரிசீலித்து ஆட்சேர்க்கப்படும்.

**சேவை நிபந்தனை**.-

(1) இப்பதவி நிரந்தரமானது, ஓய்வூதியமுடையது. விதவைகள், அநாதைகள், தபுதாரர் அநாதைகள் ஓய்வூதிய பணிக்கொடைக்கு உதவு தொகை செலுத்தல் வேண்டும் ;

(2) அரச கொள்கைகளுக்கும், வடமேல் மாகாண ஆணைக்குழுவிற்கும், வடமேல் மாகாண சபையினால் நடைமுறைப்படுத்தப்படும் சட்டதிட்டங்களுக்கும், நிறுவன நீதி சுற்றுநிருபம் மற்றும் அரச நிர்வாக சுற்றறிக்கை ஆலோசனை, திணைக்கள சட்டவிதிகள் மற்றும் அவற்றுக்கு உரிய திருத்தங்களுக்கு ஏற்பவும் செயற்படுவதற்கு உட்பட்டவராவர் ;

(3) அரச அதிகாரிகளின் பிணைச் சட்டதிட்டங்களுக்கு ஏற்ப பிணை வைப்பிடல் வேண்டும் ;

(4) அரச கொள்கைக்கு ஏற்ப மொழித்தேர்ச்சி பெறப்படல் வேண்டும் ;

(5) நியமனம் மூன்று (3) வருட கால நன்னடத்தைக் காலத்தைக் கொண்டது நன்னடத்தைக் காலத்தில் வேலை, வரவு, நடத்தை திருப்தியற்றதாயின் வேலையிலிருந்து நீக்கப்படுவார்.

**விண்ணப்பிக்க வேண்டிய முறை**: இவ்வறிவித்தலில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பம் 2010.10.31 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடிய முறையில் செயலாளர், அலவ்வ பிரதேச சபை, நாரம்மல என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அவ்வாறின்றேல் அலவ்வ பிரதேச சபை செயலாளரிடம் நேரடியாக கையளிக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்டமைக்கான சான்றிதழ் பெற வேண்டும். விண்ணப்பம் உள்ளடக்கப்பட்ட கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "........... (பதவியின் பெயர்) பதவிக்கான விண்ணப்பம்" என்று குறிக்கப்படல் வேண்டும்.

தற்போது அரச/உள்ளூராட்சி சேவையில் உள்ளோரின் விண்ணப்பம் உரிய சேவைத் தலைவரின் ஊடாக அனுப்ப வேண்டப்படுவதோடு குறித்த திகதிக்கு பின்னர் கிடைக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

விண்ணப்பப்பத்திரத்துடன் கீழ்வரும் ஆவணங்களின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகள் அனுப்பப்படல் வேண்டும் :

(1) பிறப்புச் சான்றிதழ் ;
(2) கல்விச் சான்றிதழ் ;
(3) வதிவிடத்தை நிரூபிக்கும் சான்றிதழ் ;
(4) அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்ட கிராம அதிகாரியின் சான்றிதழ் ;
(5) அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்ட நன்னடத்தைச் சான்றிதழ்கள் இரண்டு ;
(6) வேறு தகுதி அல்லது அனுபவம் சம்பந்தமான சான்றிதழ் ;
(7) விசேட தகுதி சம்பந்தமான சான்றிதழ்.

குறிக்கப்பட்ட தகுதிகளை பூர்த்திசெய்திருக்கும் விண்ணப்பதாரிகள் மாத்திரம் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

இந்த விண்ணப்பம் கோரப்பட்டதன் பின்னர் சேர்த்துக்கொள்ளப்படுவதை தாமதப்படுத்துவது, இந்த அறிவித்தலை இரத்துச் செய்வது போன்ற சகல விடயங்களினதும் அதிகாரம் அலவ்வ பிரதேச சபையின் செயலாளருக்கே உரித்தாகும்.

ஜே. ஏ. எஸ். ஜயசிங்க,
செயலாளர்,
அலவ்வ பிரதேச சபை.

அலவ்வ பிரதேச சபை,
நாரம்மல,
2010.09.07.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**அலவ்வ பிரதேச சபை**

........................................ பதவி

1. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் :-----.
   (ஆ) முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர் :-----.
2. நிரந்தர வசிப்பிட மாவட்டம் :-----.
3. நிரந்தர வசிப்பிட பிரதேச செயலாளர் பிரிவு :-----.
4. நிரந்தர முகவரி :-----.
5. ஆண்/பெண் :-----.
6. திருமணமானவர்/திருமணமாகாதவர் :-----.

7. பிறந்த திகதி :-----.
31.10.2010 ஆந் திகதிக்கு வயது :- வருடங்கள் :-----, மாதங்கள் :-----, நாட்கள் :-----.
8. தேசிய அடையாள அட்டை இலக்கம் :-----.
9. இலங்கை பிரசையாயின் பிறப்பின் மூலமா/பதிவின் மூலமா? : -----.
10. கல்வித் தகைமைகள் :-----.
11. வேறு தகைமைகள் :-----.
12. தொழில் தகைமைகள் :-----.
13. விசேட தகைமைகள் :-----.
14. சேவை அனுபவம் :-----.
(i) தற்போது சேவையாற்றும் நிறுவனம் :-----.
(ii) தற்போது வகிக்கும் பதவி :-----.
(iii) அப்பதவிக்கு நியமனம் பெற்ற தினம் :-----.
(iv) இதற்கு முன்னர் சேவை ஆற்றிய இடமும் அனுபவமும் :-----.

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் உரிய விதத்தில் உண்மை என தெரிவிக்கின்றேன்.

இந்த ஆட் சேர்புச் சம்பந்தமான நிபந்தனைகளுக்கு ஏற்ப என்னால் உண்மையான விபரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன எனவும் என்னைத் தெரிவுசெய்யப்பட்ட பின்னர் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் பிழையானவை என அறியப்பட்டால் நான் எவ்வித நஷ்டஈடுமின்றி சேவையிலிருந்து நீக்கப்படவுள்ளேன் என்பதையும் நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : -----.

**திணைக்கள/நிறுவனத் தலைவரின் சான்றிதழ்**

இவ்விண்ணப்பதாரி மேலே குறிப்பிட்ட விபரங்கள் உண்மை எனவும் தெரிவு செய்யப்பட்டால் இச்சேவையில் இருந்து விடுவிக்க முடியும் என்றும் இத்துடன் சான்றுப்படுத்துகின்றேன்.

-----,
திணைக்கள/ நிறுவன
தலைவரின் கையொப்பம்.

திகதி : -----.

10-19

---

## ரிதீகம பிரதேச சபை

ரிதீகம பிரதேச சபையில் வெற்றிடமாக உள்ள கீழ்க்காணும் பதவிகளுக்கு சேர்த்துக்கொள்வதற்காக உரிய தகைமைகள் உள்ள ரிதீகம பிரதேச சபை அதிகார எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

வடமேல் ஆளுனர் அவர்களின் 2008.11.19 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்ட வடமேல் மாகாண அரச சேவையின் ஆரம்ப பயிற்சியற்ற, பதவிகளுக்கு சேர்த்துக்கொள்ளப்படும்.

| பதவிப்பெயர் | தரம் | வெற்றிடமான பதவிகள் | வெற்றிடங்கள் | சம்பள திட்டம் |
|---|---|---|---|---|
| 01. அலுவலக ஊழியர் | III | ஆரம்ப தொழில்நுட்பமற்ற | 03 | ரூபா 11,730-10×120-10×130 - 10×145 - 12 × 160 - ரூபா 17,600. (PL 1-2006A) |

**1. கல்வித் தகைமைகளும் ஏனைய தகைமைகளும் :**

வெளிவாரியான விண்ணப்பதாரிகள் :

கல்விப் பொதுத் தராதரப்பத்திர சாதாரண தரப் பரீட்சையில் ஆகக் குறைந்தது இரண்டு (02) பாடங்களிலேனும் சித்தி அடைந்திருத்தல் வேண்டும். (விருப்பத்துக்குரிய பாடங்கள் தவிர்ந்த)

உள்வாரியான விண்ணப்பதாரிகள் :

தற்போது மாகாண சபை அரச சேவையில் குறிப்பிட்ட நிறுவனத்தில் நிரந்தரப் பதவி வகிக்கும் விண்ணப்பதாரிகள் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட பாடசாலை ஒன்றில் 08 ஆம் தரம் (09 ஆம் ஆண்டு) சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.

1.2 தற்போது சேவையிலுள்ள அமய/சமயாசமய/ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ள ஊழியர்களுக்கு மாத்திரம் செல்லுபடியாகும் வகையில் அக்கால கட்டத்தில் சேவையில் சேர்த்துக்கொள்ளப்படும்போது அமுலில் இருந்த நடைமுறையின் கல்வித்தகைமைகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

1.3 விண்ணப்ப முடிவுத் திகதிக்கு வயது 18 வருடங்களுக்கு குறையாமலும், 45 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். தற்போது அரச சேவையில், மாகாண அரச சேவையில் இருப்பவர்களுக்கு இந்த வயதெல்லை செல்லுபடியாகாது.

1.4 இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

1.5 விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிக்கு ரிதீகம பிரதேச சபை அதிகார எல்லைக்குள் 03 வருட பதிவை உறுதிப்படுத்தல் வேண்டும். (வசிப்பிட கிராம உத்தியோகத்தரினால் வழங்கப்பட்ட உறுதிப்பத்திரத்தினை குறிப்பிட்ட பிரதேச செயலாளர் கையொப்பமிட்டு உறுதிப்படுத்திய உறுதிப்பத்திரமாக இருத்தல் வேண்டும்.

1.6 நல்லொழுக்கமும், நல்ல தேகாரோக்கியம் உடையவாரக இருத்தல் வேண்டும்.

1.7 தற்போது அரச அல்லது உள்ளூராட்சி சேவையிலிருக்கும் விண்ணப்பதாரிகள் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிக்கு சரியாக ஐந்து (05) வருடங்களுக்குள் ஏதும் ஒரு குற்றத்துக்கு எச்சரிக்கையைத் தவிர்ந்த தண்டனை பெறாதவராகவும், இக்காலத்துக்குள் உழைக்கக் கூடிய சம்பள அதிகரிப்புக்களை உரிய காலத்துக்குள் பெற்றுக்கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.

1.8 தற்போது ரிதீகம பிரதேச சபையில் நிரந்தர, அமய, சமாயாசமய, ஒப்பந்த அடிப்படையில் வேலையில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். (விரும்பத்தகுந்த வகையில் சேவை செய்தமைக்கான அத்தாட்சிப்பத்திரத்தின் மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும்.)

**2. சேவை நிபந்தனைகள் :**

2.1 இந்தப்பதவி நிரந்தரமானது. விதவை, அநாதை, ஓய்வு ஊதியத்திட்டத்துக்கு அங்கத்துவப்பணம் செலுத்தப்படல் வேண்டும்.

2.2 தெரிவுசெய்யப்படுபவர்கள் (03) மூன்று வருடகால நன்நடத்தைக் காலத்துக்கு உட்படுத்தப்படுவார்கள். இக்காலத்துக்குள் வேலை, வரவு, நடத்தை விரும்பத்தகுந்த முறையில் இருக்குமாயின், முதலாம் செயல்திறன் பரீட்சையில் சித்தியடைந்திருப்பின் சேவை நிரந்தரமாக்கப்படும்.

**3. விண்ணப்பிக்கும் முறை :**

3.1 இந்த அறிவித்தலின் இறுதியில் காணப்படுகின்ற மாதிரிப் விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம் தயாரித்த விண்ணப்பப்படிவத்தை 2010.10.25 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கும்படியாக "செயலாளர், பிரதேச சபை, ரிதீகம" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

3.2 விண்ணப்ப கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும்.

4. விண்ணப்பப்படிவத்தை பரிசீலித்ததன் பின்னர் அடிப்படைத் தகைமை பெற்றுள்ள விண்ணப்பதாரிகளை மாத்திரம் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படும்.

5. இந்த விண்ணப்பம் கோரப்பட்டதன் பின்னர் அல்லது அதற்கு இடைப்பட்ட அல்லது சேவைக்குச் சேர்த்துக்கொள்ளப்படுவதை தாமதப்படுத்துவது, இந்த அறிவித்தலை இரத்துச்செய்வது போன்ற சகல விடயங்களினதும் அதிகாரம் பிரதேச சபையின் செயலாளருக்கே உரித்தாகும்.

டி. டி. விக்ரமசிங்ஹ,
செயலாளர்,
ரிதீகம பிரதேச சபை.

ரிதீகம பிரதேச சபை அலுவலகம்,
ரிதீகம,
2010 ...............

மாதிரி விண்ணப்பப்படிவம்

**ரிதீகம பிரதேச சபை**

......................................... பதவி

1. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
(ஆ) முழுப்பெயர் :----.

2. முகவரி :----.

3. பிறந்த திகதி :- ஆண்டு :----. மாதம் :----. திகதி :----.

4. ஆணா/பெண்ணா? :----.

5. விவாகமானவரா/விவாகமாகாதவரா ? :----.

6. தேசிய இனம்:----.

7. நீர் இலங்கைப் பிரஜையாயின், பிறப்பினாலா? பதிவின் மூலமா ? :----.

8. கல்வித் தகைமைகள்:----.
(அத்தாட்சிப்பத்திரம் இணைக்கப்படல் வேண்டும்.)

9. நீர் ஏற்கெனவே இந்த சேவை செய்பவராயின் சேவைக்காலமும், விபரமும் :------------------------.
(நிரந்தர/தற்காலிக/அமய/இணைக்கப்பட்ட/கொடுப்பனவு அடிப்படையிலா ? என்ற விபரம்.)

10. தொழில் தகைமைகளும், முன்அனுபவமும் :----.

மேற் கண்ட விபரங்கள் என்னுடைய அறிவுக்கு எட்டிய வகையிலும், எனது நம்பிக்கையினடிப்படையிலும் உண்மையானதும், சரியானதும், என்று தெரிவிப்பதுடன், இங்கு குறிப்பிட்டுள்ள தகவல்கள் பிழையானவை என நான் அந்த பதவிக்கு தெரிவுசெய்யப்பட முன்னர் தெரியவந்தால் நான் தகுதியற்றவன் என கருதப்படுவதுடன் நியமனம் கிடைக்கப்பட்ட பின்னர் தெரியவந்தால் எதுவித நஷ்டஈடும் இன்றி என்னை சேவையிலிருந்து நீக்குவதற்கு முடியும் என்பதை நான் அறிவேன்.

....................................,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

11-115

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

### பதுளை மாநகரசபை

1947 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க மாநகரசபைக் கட்டளைச் சட்டம்

**48(1) ஆவது பிரிவின்கீழ் செய்யப்படும் அறிவித்தல்**

1947 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க மாநகரசபைக் கட்டளைச் சட்டத்தின் 48 (1) ஆவது பிரிவின் நியதிகளின்படி ஊவா மாகாணத்தின் பதுளை மாவட்ட, பதுளை மாநகர சபையின் மூலம் இங்கு கீழ் உள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ள பாதையை பொதுவான உபயோகத்திற்காக பதுளை மாநகரசபைக்கு உரிமையாக்குவதற்கு 2010.07.06 ஆந் திகதியுடைய சபைக் கூட்டத்தின்போது தீர்மானிக்கப்பட்டது.

பிரதேசப் பொது மக்களினாலாவது அல்லது சம்பந்தப்பட்ட பாதைக்குரிய இடங்களுக்கு உரிமையானவர்களாக உரிமைகோரும் தரப்பினர்களினாலாவது ஏதேனும் எதிர்ப்புத் தெரிவிப்பதேயானால் இந்த அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரமான திகதியில் இருந்து 30 நாட்களுக்குள் தங்களது எதிர்ப்பைச் சாட்சிகளுடன் எழுத்துமூலமாக மாநகரசபைக்கு அறிவிக்க நடவடிக்கை எடுக்குமாறு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

சொல்லப்பட்ட கால எல்லைக்குள் இவ்வறிவித்தலின்படி செயல்படாவிடின் எதிர்ப்புத் தெரிவிக்கப்படவில்லை எனக்கருதி இந்த வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரசுரிக்கப்பட்டுள்ளதன்படி கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பாதையை பதுளை மாநகரசபைக்கு உரிமையான பாதையாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, நிர்வாகம் செய்யப்படும் என்பதைப் பிரகடனப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என இத்தால் அறிவிக்கின்றேன்.

(சட்டத்தரணி) உபாலி நிஸ்ஸங்க குணசேகர,
மாநகர பிதா,
பதுளை மாநகர சபை.

மாநகர சபை அலுவலகம்,
பதுளை,
2010, செத்தெம்பர் 09.

**அட்டவணை**

| தொடர் இலக்கம் | பாதையின் பெயர் | ஆரம்பிக்கும் ஸ்தானம் | முடிவுறும் ஸ்தானம் | இடதுபக்க வரிப்பண இலக்கம் | வலதுபக்க வரிப்பண இலக்கம் | நீளம் (மீட்டர்) | அகலம் (மீட்டர்) |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | விஜயாராம பன்சலையின் தெற்கு ஒழுங்கை | மஹியங்கனை வீதி | வரிப்பண இலக்கம் 169/11 | 169/2A, 169/4, 169/6, 169/7, 169/9, 169/10, 169/11 | - | 100m | 4.05m |

10-21

---

**பதுளை மாநகரசபை**

*1947 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க மாநகர சபைக் கட்டளைச் சட்டம்*

**48(1) ஆவது பிரிவின்கீழ் செய்யப்படும் அறிவித்தல்**

1947 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க மாநகரசபைக் கட்டளைச் சட்டத்தின் 48 (1) ஆவது பிரிவின் நியதிகளின்படி ஊவா மாகாணத்தின் பதுளை மாவட்ட, பதுளை மாநகர சபையின் மூலம் இங்கு கீழ் உள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ள பாதையை பொதுவான உபயோகத்திற்காக பதுளை மாநகரசபைக்கு உரிமையாக்குவதற்கு 2010.06.03 ஆந் திகதியுடைய சபைக் கூட்டத்தின்போது தீர்மானிக்கப்பட்டது.

பிரதேசப் பொது மக்களினாலாவது அல்லது சம்பந்தப்பட்ட பாதைக்குரிய இடங்களுக்கு உரிமையானவர்களாக உரிமைகோரும் தரப்பினர்களினாலாவது ஏதேனும் எதிர்ப்புத் தெரிவிப்பதேயானால் இந்த அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரமான திகதியில் இருந்து 30 நாட்களுக்குள் தங்களது எதிர்ப்பைச் சாட்சிகளுடன் எழுத்துமூலமாக மாநகரசபைக்கு அறிவிக்க நடவடிக்கை எடுக்குமாறு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

சொல்லப்பட்ட கால எல்லைக்குள் இவ்வறிவித்தலின்படி செயல்படாவிடின் எதிர்ப்புத் தெரிவிக்கப்படவில்லை எனக்கருதி இந்த வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரசுரிக்கப்பட்டுள்ளதன்படி கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பாதையை பதுளை மாநகரசபைக்கு உரிமையான பாதையாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, நிர்வாகம் செய்யப்படும் என்பதைப் பிரகடனப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என இத்தால் அறிவிக்கின்றேன்.

(சட்டத்தரணி) உபாலி நிஸ்ஸங்க குணசேகர,
மாநகர பிதா,
பதுளை.

மாநகர சபை அலுவலகம்,
பதுளை,
2010.......................

**அட்டவணை**

| தொடர் இலக்கம் | பாதையின் பெயர் | ஆரம்பிக்கும் ஸ்தானம் | முடிவுறும் ஸ்தானம் | இடதுபக்க வரிப்பண இலக்கம் | வலதுபக்க வரிப்பண இலக்கம் | நீளம் (மீட்டர்) | அகலம் (மீட்டர்) |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | ரத்வத்த மாவத்தையின் கிளைப்பாதை | ரத்வத்தை மாவத்தை | வரிப்பண இலக்கம் 29/17 | 29/7, 29/8, 29/9, 29/10, 29/15, 29/17 | 29/22, 29/29 | 200m | 4.5m |

10-22

### தங்காலை நகர சபை

*நகர சபை கட்டளைச் சட்டம் (255 ஆவது அதிகாரம்)*

**55 "அ" பிரிவின் கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்**

*நகர சபை கட்டளைச் சட்டத்தின் (255 ஆவது அதிகாரம்) 55 "அ" பிரிவின் கீழ் தென் மாகாணத்தின் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் தங்காலை பிரதேச செயலாளர் பிரிவில் தங்காலை நகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள கீழ்வரும் அட்டவணையில் காட்டப்பட்ட வீதிக்கு, தென்மாகாண சபையின் உள்ளூராட்சி விடயத்துக்குப் பொறுப்பான கௌரவ அமைச்சரினால் தரப்பட்டுள்ள அனுமதியின் படி "தேசமானிய என். யூ. ஜயவர்தன மாவத்தை" என்ற பெயர் குறிப்பிடப்படும் என்பது இத்தால் வெளியிடப்படுகின்றது.*

*அனில் செல்வா ஹென்னதி,*
*தலைவர்,*
*தங்காலை நகர சபை.*

*நகரசபை அலுவலகம்,*
*தங்காலை,*
*2010, ஒகத்து 12 ஆந் திகதி.*

**அட்டவணை**

| | | |
|---|---|---|
| 1. | உள்ளூராட்சி நிறுவனத்தின் பெயர் | - தங்காலை நகர சபை |
| 2. | மாவட்டம் | - ஹம்பாந்தோட்டை |
| 3. | வீதியின் தற்போதைய பெயர் | - மெதகெட்டிய வீதி |
| 4. | புதிதாக குறிப்பிடப்படும் பெயர் | - "தேசமானிய என். யூ. ஜயவர்தன மாவத்தை" |
| 5. | வீதியின் விபரம் | - தங்காலை திஸ்ஸ வீதியில் பாலத்துக்கு அருகாமையில் ஆரம்பித்து தீபாங்கர வீதிக்கு அருகில் முடிவுறும் வீதியாகும் |

*10-23*

---

### கொபைகனே பிரதேச சபை

வரிபண நூற்று வீதம்

*கொபைகனே பிரதேச சபை அதிகாரப் பிரிவில் மேம்படுத்தப்பட்ட பிரதேசங்களில் சொத்துக்களின் வருடாந்த பெறுமதி நூற்றுக்கு மூன்று (3%) என்றவாறு வரிபண நூற்று வீதம் அறவிடுவதற்கு கௌரவ முதலமைச்சின் செயலாளரின் வ/முஅசெ/ஆ08/64 - 2010.03.05 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது என்று இத்துடன் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.*

எஸ். ஏ. டீ. விஜித பிரேமலால்,
*தலைவர்,*
கொபைகனே பிரதேச சபை.

*பிரதேச சபை அலுவலகம்,*
கொபைகனே,
*2010, ஒகத்து 25 ஆந் திகதி.*

*10-31*

---

### ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபை

*1975 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வீதிகளுக்கு பெயர் இடல், சிலைகள் பராமரித்தல் என்பன சட்டத்தின் கீழ் பொதுமக்களுக்கு அறிவுறுத்தப்படுகின்றது*

*கீழ் காணும் அட்டவணையில் காணப்படும் மாநகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள வீதிக்கு பெயர் குறிப்பிடுவதற்காக மேல் மாகாண உள்ளூராட்சி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.*

இதன் பிரகாரம் இந்த வீதி கீழே காணப்பட்டவாறு பெயர் குறிப்பிட இந்த சபையினால் நடவடிக்கை எடுக்கப்படும் என இத்தால் அறிவிக்கிறேன்.

சாந்த பி. லியனகே,
நகர ஆணையாளர்,
ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை மாநகர சபை.

2010.09.14.

**அட்டவணை**

| தொடர் இல. | வீதி அமைந்துள்ள இடம் | உத்தேசிக்கப்பட்ட பெயர் |
|---|---|---|
| 01 | மிரிஹான ஜுபிலி தூண் சந்தியில் வரி இல. 2ஏ தொடக்கம் வரி இல. 56 கட்டிய சந்தி வரை, கட்டிய சந்தி 3ஏ தொடக்கம் 77 ஜுபிலி தூண் வரை உள்ள வீதி | ஆரியதாச பீரிஸ் மாவத்தை |

2010.09.14.

10-42

---

**மாத்தறை மாநகர சபை**

1975 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க சங்கங்களின் உறுதிப்பத்திரம் வழங்கும் சட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிக்கப்பட்டுள்ள நபர்கள் மூலம் அவர்களின் பெயர்களுக்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள சங்கங்களை, அதில் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் நடாத்திச் செல்வதற்கு 2011 ஆம் ஆண்டிற்கான உறுதிப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பித்துள்ளார்கள் என்பதை 1975 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க சங்கங்களுக்கான உறுதிப்பத்திரம் வழங்கும் சட்டத்தின் (06) ஆம் பிரிவின் “ஆ” அத்தியாயத்தின் கீழ் அறியத்தருகின்றேன்.

இந்த சங்கங்களுக்கு அருகாமையிலோ குறிப்பிடப்பட்ட இடங்களுக்கு எதிர்பார்க்கப்பட்ட இடங்களிலோ வதியும் ஒரு நபரினால் விளையாட்டு சங்கங்களுக்கான உறுதிப்பத்திரம் வழங்குவதற்கு மறுப்புக்கள் தெரிவிக்கப்படுமாயின் இந்த அறிவித்தல் கொடுக்கப்பட்டு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு 04 கிழமைக்குள் தகுந்த மறுப்புக் காரணங்கள் காட்டி எனக்கு எழுத்து மூலம் பிரதிகள் இரண்டு தருமாறு இத்துடன் அறியத்தருகிறேன்.

மாநகர சபை ஆணையாளர்,
மாத்தறை மாநகர சபை.

மாநகர சபை அலுவலகம்,
மாத்தறை,
2010, ஓகத்து 18 ஆந் திகதி.

**அட்டவணை**

| விண்ணப்பதாரியின் பெயர் | சங்கத்தலைவர் / முகாமையாளர்/ செயலாளர் | சங்கத்தின் பெயர் | சங்கம் நடத்தப்படும் இடம் |
|---|---|---|---|
| 1. கெமுளு எரிக் சமரவிக்ரம | செயலாளர் | றுகுனு விளையாட்டு சங்கம் | கூட்டுறவு மந்திரம், புகையிரத வீதி, மாத்தறை |
| 2. சுனில் மொஹட்டி | செயலாளர் | மாத்தறை விளையாட்டு சங்கம் | உயன்வத்த விளையாட்டு மைதானம், காலி |
| 3. விக்கிரமசிங்க கால்லகே துசித்த | செயலாளர் | பிரின்ஸ் விளையாட்டு சங்கம் | இலக்கம் 103, அக்குரஸ்ஸ வீதி, இஸதீன் நகரம், மாத்தறை |

10-139/1

**மாத்தறை மாநகர சபை**

*1975 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க சங்கங்களின் உறுதிப்பத்திரம் வழங்கும் சட்டம்*

*இங்கு கீழே அட்டவணையில் குறிக்கப்பட்டுள்ள நபர்கள் மூலம் அவர்களின் பெயர்களுக்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள சங்கங்களை, அதில் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் நடாத்திச் செல்வதற்கு 2011 ஆம் ஆண்டிற்கான உறுதிப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பித்துள்ளார்கள் என்பதை 1975 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க சங்கங்களுக்கான உறுதிப்பத்திரம் வழங்கும் சட்டத்தின் (06) ஆம் பிரிவின் "ஆ" அத்தியாயத்தின் கீழ் அறியத்தருகின்றேன்.*

*இந்த சங்கங்களுக்கு அருகாமையிலோ குறிப்பிடப்பட்ட இடங்களுக்கு எதிர்பார்க்கப்பட்ட இடங்களிலோ வதியும் ஒரு நபரினால் விளையாட்டு சங்கங்களுக்கான உறுதிப்பத்திரம் வழங்குவதற்கு மறுப்புக்கள் தெரிவிக்கப்படுமாயின் இந்த அறிவித்தல் கொடுக்கப்பட்டு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு 04 கிழமைக்குள் தகுந்த மறுப்புக் காரணங்கள் காட்டி எனக்கு எழுத்து மூலம் பிரதிகள் இரண்டு தருமாறு இத்துடன் அறியத்தருகிறேன்.*

*மாநகர சபை ஆணையாளர்,*
*மாத்தறை மாநகர சபை.*

*மாநகர சபை அலுவலகம்,*
*மாத்தறை,*
*2010, ஒகத்து 18 ஆந் திகதி.*

**அட்டவணை**

| *விண்ணப்பதாரியின் பெயர்* | *சங்கத்தலைவர் / முகாமையாளர்/ செயலாளர்* | *சங்கத்தின் பெயர்* | *சங்கம் நடத்தப்படும் இடம்* |
|---|---|---|---|
| *1. கே. எஸ். சுனில் இல. 80/5, ராஹுல வீதி, மாத்தறை* | *செயலாளர்* | *ஓஎஸீஸ் விளையாட்டு சங்கம்* | *இல. 76, ராஹுல வீதி, மாத்தறை* |
| *2. லலித் சிறிவர்தன 1/22, பொல்ஹேன வீதி, பம்புரன, மாத்தறை.* | *செயலாளர்* | *ஜனதா விளையாட்டு சங்கம்* | *இல. 50, குமாரதுங்க மாவத்தை, மாத்தறை* |
| *3. உபேசிறிவர்தன ஆரச்சிகே லயனல்* | *செயலாளர்* | *பெரகும் விளையாட்டு சங்கம்* | *இலக்கம் 71, பதூதா வீதி, மாத்தறை* |

*10-139/2*

---

**மாத்தறை மாநகர சபை**

*1975 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க சங்கங்களின் உறுதிப்பத்திரம் வழங்கும் சட்டம்*

*இங்கு கீழே அட்டவணையில் குறிக்கப்பட்டுள்ள நபர்கள் மூலம் அவர்களின் பெயர்களுக்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள சங்கங்களை, அதில் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் நடாத்திச் செல்வதற்கு 2011 ஆம் ஆண்டிற்கான உறுதிப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பித்துள்ளார்கள் என்பதை 1975 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க சங்கங்களுக்கான உறுதிப்பத்திரம் வழங்கும் சட்டத்தின் (06) ஆம் பிரிவின் "ஆ" அத்தியாயத்தின் கீழ் அறியத்தருகின்றேன்.*

*இந்த சங்கங்களுக்கு அருகாமையிலோ குறிப்பிடப்பட்ட இடங்களுக்கு எதிர்பார்க்கப்பட்ட இடங்களிலோ வதியும் ஒரு நபரினால் விளையாட்டு சங்கங்களுக்கான உறுதிப்பத்திரம் வழங்குவதற்கு மறுப்புக்கள் தெரிவிக்கப்படுமாயின் இந்த அறிவித்தல் கொடுக்கப்பட்டு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு 04 கிழமைக்குள் தகுந்த மறுப்புக் காரணங்கள் காட்டி எழுத்து மூலம் பிரதிகள் இரண்டு தருமாறு இத்துடன் அறியத்தருகிறேன்.*

*மாநகர சபை ஆணையாளர்,*
*மாத்தறை மாநகர சபை.*

*மாநகர சபை அலுவலகம்,*
*மாத்தறை,*
*2010, செத்தெம்பர் 01 ஆந் திகதி.*

**அட்டவணை**

| விண்ணப்பதாரியின் பெயர் | சங்கத்தலைவர் / முகாமையாளர்/ செயலாளர் | சங்கத்தின் பெயர் | சங்கம் நடத்தப்படும் இடம் |
|---|---|---|---|
| 1. சுனில் சில்வா | செயலாளர் | நில்மினி விளையாட்டு சங்கம் | இல. 66, புதிய தங்கல்ல வீதி |

10-139/3

---

**அரணாயக பிரதேச சபை**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம்

**14 ஆம் மற்றும் 24(2) ஆம் பிரிவின் உறுப்புரைகளுக்குக் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 24 ஆவது உறுப்புரைக்கு அமைய சப்பிரகமுவ மாகாணத்தில் கேகாலை மாவட்டத்தின் அரணாயக பிரதேச சபையினால் எழுத்து வடிவில் காட்டப்பட்டுள்ள பாதைகள் அரணாயக பிரதேச சபைக்குச் சொந்தமான பாதைகள் என இத்துடன் பிரகடனப்படுத்தப்பட்டு அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.

தற்போது பிரதேச சபையினால் அளக்கப்பட்டு அடையாளமிடப்பட்டுள்ள இப்பாதைகள் தொடர்பாக குறிப்பிட்ட காணி உரிமையாளர்களால் யாதாயினும் எதிர்ப்புக்கள் தெரிவிக்கப்படுவதாயின் இவ்வறிவித்தல் விடுக்கப்பட்ட திகதியிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் தமது உரிமையை நிரூபிப்பதற்கு 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 24 (2) ஆம் உறுப்புரைக்கு அமைய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இத்துடன் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.

டபிள்யூ. ஆர். காமனி சனத் பண்டார,
தலைவர்,
அரணாயக பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
அரணாயக,
2010.09.09.

**அட்டவணை**

| | | |
|---|---|---|
| பாதையின் பெயர் | : | கங்துன உடகம திக்கலையில் இருந்து குகுல்பிட்டிய பாதை |
| பாதையின் ஆரம்பமும் முடிவும் | : | கங்துன உடகம திக்கலையிலிருந்து குகுல்பிட்டிய வரை |
| கிராம அதிகாரிப் பிரிவு | : | 58/பி -உடகம கங்துன |
| பாதையின் நீளம் | : | 463.50 மீற்றர் அகலம் : 10 அடி |

பாதையின் ஆரம்பம் முதல் இறுதி வரை பாதையின் இடப்பக்கமாகவுள்ள காணியின் பெயர்களும் காணி உரிமையாளர்களின் பெயர்களும்

| | |
|---|---|
| 1. திரு பீ. பீ. சுமித் குணதிலக | பதலவத்த |
| 2. திரு. ஐ. என். பீ. சமன்த சமன் குமார | கொடபெல |
| 3. திரு. ஆர். பீ. நிமல் சுரவீர | கெத்தவிலகொல்ல கும்புர |
| 4. திரு. ஐ. பீ. சமன்த சமன் குமார | கொடபெல |
| 5. திரு. பீ. பீ. ஜயவீர | கொடபெல |
| 6. திரு. ஆர். பீ. உபாலி | கொடபெல |
| 7. திரு. ஐ. என். பீ. குணதிலக | கொடபெல |

பாதையின் ஆரம்பம் முதல் இறுதிவரை பாதையின் வலப்பக்கமாகவுள்ள காணியின் பெயர்களும் காணி உரிமையாளர்களின் பெயர்களும்

| | |
|---|---|
| 1. திரு. ஐ. என். பீ. சமன்த சமன் குமார | கொடபெல |
| 2. திரு. எச். பீ. பத்மசிரி குணதாச | லபுகொட்டுவ |
| 3. திரு. ஆர். பீ. நிமல் சுரவீர | கெத்தவிலகொல்ல கும்புர |
| 4. திரு. ஆர். பீ. சோமரத்ன | கொடபெல |
| 5. திரு. எச். பீ. பத்மசிரி | குகுல்பிட்டிய கும்புர |

| | |
|---|---|
| 6. திரு. ஆர். பீ. உபாலி | கொடபெல |
| 7. திரு. எச். பீ. ரத்னவீர | குகுல்பிட்டிய கும்புர |
| 8. திரு. எச். பீ. விஜேசிங்க | குகுல்பிட்டிய கும்புர |

உத்தரவு பெற்ற நில அளவையாளர் திரு. எச். எம். ஆர். டீ. ஹேரத் அவர்களின் 2010.07.20 ஆந் திகதி 6814 ஆம் இலக்க பட வரைபுத் திட்டத்திற்கு ஏற்ப.

| | | |
|---|---|---|
| பாதையின் பெயர் | : | உஸ்ஸாபிட்டிய ஆராமய அருகில் பரனகெதரவத்த பாதை |
| பாதையின் ஆரம்பமும் முடிவும் | : | உஸ்ஸாபிட்டிய ஆராமய அருகில் ஆரம்பித்து பரனகெதரவத்தையில் முடிவடையும் |
| கிராம அதிகாரிப் பிரிவு | : | இல. 17 உஸ்ஸாபிட்டிய |
| பாதையின் நீளம் | : | 90.50 மீற்றர் அகலம் : 8 அடி |

பாதையின் ஆரம்பம் முதல் இறுதி வரை பாதையின் இடப்பக்கமாகவுள்ள காணியின் பெயர்களும் காணி உரிமையாளர்களின் பெயர்களும் :

| | |
|---|---|
| 1. திரு பி. கே. குணதாச | பண்டாரவத்தை |
| 2. திரு. பி. கே. பியசேன | பண்டாரவத்தை |
| 3. திரு. எச். விமலசேன | பரனகெதரவத்தை |

பாதையின் ஆரம்பம் முதல் இறுதிவரை பாதையின் வலப்பக்கமாகவுள்ள காணியின் பெயர்களும் காணி உரிமையாளர்களின் பெயர்களும் :

| | |
|---|---|
| 1. திரு. ஜீ. ஆர். செனெவிரத்ன | நுவரகொடவத்தை |
| 2. திரு. எச். சுனில் ஜயரத்ன | ஹல்லொகெவத்தை |
| 3. திருமதி என். எலிஸ் நோனா | ஹல்லொகெவத்தை |

உத்தரவு பெற்ற நில அளவையாளர் திரு. எச். எம். ஆர். ஹேரத் அவர்களின் 2010.02.20 ஆந் திகதி 6486 ஆம் இலக்க பட வரைபுத் திட்டத்திற்கு ஏற்ப.

10-122/1

---

**அரணாயக பிரதேச சபை**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம்

2010.05.21 ஆந் திகதிய 1655 ஆம் இலக்க மற்றும் 2010.04.09 ஆந் திகதிய 1649 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சேசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் IV (ஆ) ஆம் பகுதி மூலம் என்னால் வெளியிடப்பட்ட அரணாயக பிரதேச சபைக்குரிய பாதைகள் சம்பந்தமாக விடுக்கப்பட்ட அறிவித்தலில் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள பாதைகள் யாவும் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 24(3) (1) பிரிவின் பிரகாரம் அரணாயக பிரதேச சபையால் கையேற்கப்பட்டுள்ளமையை இத்தால் அறியத்தருகின்றேன்.

டப்ளியூ. ஆர். காமினி சனத் பண்டார,
தலைவர்,
அரணாயக பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
அரணாயக,
2010.09.09.

| | | |
|---|---|---|
| *01. பாதையின் பெயர்* | : | *பரகஹபீல்ல தெனிய பாதை* |
| *பாதையின் ஆரம்பமும் முடிவும்* | : | *அரணாயக்கவில் இருந்து ஹெம்மாதகம பாதையில் வணக்கத்திற்குரிய இந்துல்கொடை ஞானானந்த தேரர் அவர்களுக்குரிய கனேகும்புர எனும் காணியில் ஆரம்பித்து திரு. பீ. எம். ஹீன்பண்டா அவர்களுக்கு உரித்தான பீல்லதெனிய கும்புர எனும் காணியில் பிரதான பாதையுடன் இணையும்.* |
| *கிராம அதிகாரிப் பிரிவு* | : | *இல. 41டீ ரந்திலிகல* |
| *பாதையின் நீளம்* | : | *477 மீற்றர்*<br>*அகலம் : 8 அடி* |

| | | |
|---|---|---|
| *02. பாதையின் பெயர்* | : | *திப்பிட்டிய புதவத்த பாதை* |
| *பாதையின் ஆரம்பமும் முடிவும்* | : | *திப்பிட்டிய புதவத்த பாதையில் இருந்து திப்பிட்டிய நகரத்தினூடாக வில்பொலை வரையுள்ள பாதை* |
| *கிராம அதிகாரிப் பிரிவு* | : | *திப்பிட்டிய* |
| *பாதையின் நீளம்* | : | *276 மீற்றர் அகலம் : 10 அடி* |

| | | |
|---|---|---|
| *03. பாதையின் பெயர்* | : | *அட்டாப்பிட்டிய பாலத்திற்கு அருகாமையில் இருந்து கோன்கஹகெலே வத்த காணித்துண்டு இலக்கம் 79 வரை* |
| *பாதையின் ஆரம்பமும் முடிவும்* | : | *அட்டாப்பிட்டிய ஹிங்குல பாதையில் அட்டாப்பிட்டிய பாலத்திற்கு அருகில் ஆரம்பித்து காணித்துண்டு இலக்கம் 1, 2, 32, 33, 35, 36, 37, 77, 76, 78, 79, 74 வரை* |
| *கிராம அதிகாரிப் பிரிவு* | : | *அட்டாப்பிட்டிய* |
| *பாதையின் நீளம்* | : | *650 மீற்றர்*<br>*அகலம் : பாலத்திற்கு அருகிலிருந்து 1 ஆம் இலக்க காணித்துண்டு வரைக்கும் அகலம் 30 அடி, 1 ஆம் இலக்க காணித்துண்டிலிருந்து 79 ஆம் இலக்க காணித்துண்டு வரை 20 அடி.* |

*10-122/2*

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**2009 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2010 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,300 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **2010 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்குமான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 2,080.00 | 3,120.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 1,300.00 | 3,120.00 |
| III வது தொகுதி | 780.00 | 3,120.00 |
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 4,160.00 | 6,240.00 |
| II ஆவது பகுதி | 580.00 | 3,120.00 |
| III வது பகுதி | 405.00 | 3,120.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 890.00 | 2,400.00 |
| V வது பகுதி | 860.00 | 420.00 |
| VI வது பகுதி | 260.00 | 180.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வது தொகுதி | 40.00 | 60.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III வது தொகுதி | 15.00 | 60.00 |
| I வது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II வது பகுதி | 12.00 | 60.00 |
| III வது பகுதி | 12.00 | 60.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V வது பகுதி | 123.00 | 60.00 |
| VI வது பகுதி | 87.00 | 60.00 |

**இவைகளில் எவையேனும் பெற விரும்புவோர் சரியான பணத்தொகையை "அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், இல. 132, மாயா அவெனியு, கிருளப்பனை, கொழும்பு 5" என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப்பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவார்.**

# வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், இல. 132, மாயா அவெனியு, கிருளப்பனை, கொழும்பு 5** என்ற விலாசத்துக்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.***

***முக்கிய கவனிப்பு.*** *- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்** என்பதையும், **அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது** என்பதையும் கவனத்திற் கொள்க.*

***அட்டவணை - 2010***

| *மாதம்* | | *வெளியீட்டு நாள்* | | | *அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும்* | | |
|---|---|---|---|---|---|---|---|
| **ஒற்றோபர்** | .. | வெள்ளி | 01.10.2010 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 17.09.2010 |
| | | வெள்ளி | 08.10.2010 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 24.09.2010 |
| | | வெள்ளி | 15.10.2010 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 01.10.2010 |
| | | வியாழன் | 21.10.2010 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 08.10.2010 |
| | | வெள்ளி | 29.10.2010 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 15.10.2010 |
| **நவெம்பர்** | .. | வியாழன் | 04.11.2010 | .. | நண்பகல் 12 | வியாழன் | 21.10.2010 |
| | | வெள்ளி | 12.11.2010 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 29.10.2010 |
| | | வெள்ளி | 19.11.2010 | .. | நண்பகல் 12 | வியாழன் | 04.11.2010 |
| | | வெள்ளி | 27.11.2010 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 12.11.2010 |
| **திசெம்பர்** | .. | வெள்ளி | 03.12.2010 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 19.11.2010 |
| | | வெள்ளி | 10.12.2010 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 27.11.2010 |
| | | வெள்ளி | 17.12.2010 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 03.12.2010 |
| | | வெள்ளி | 24.12.2010 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 10.12.2010 |
| | | வெள்ளி | 31.12.2010 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 17.12.2010 |

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2010 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.*